## சுருக்கம்

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை – சென்னை – எண்ணூர் துறைமுக இணைப்பு திட்டத்தின் கீழ் (Ennore - Manali Road Improvement Project) . திரு வொற்றியூர் – பொ ன்னேரி – பஞ்செட்டி சாலையினை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் – நிலம் கையகப்படுத்துதல் – எண் 144, வல்லூர் II & III கிராமங்களில் புல எண் 615/1பி மற்றும் பலவற்றில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை நிலஎடுப்பு சட்டம் 2001–ன் கீழ் நிலஎடுப்பு செய்யப்பட்டதற்கு மேல்முறையீட்டு மனு எண் 1006/2015 முதல் 1109/2015 வரையுள்ள 104 தொகுப்பு வழக்குகளுக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் 29–11–2016 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு – உயர்த்திய இழப்பீடுத் தொகை வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.88** **நாள் 25.05.2018**

**விளம்பி, வைகாசி– 11, திருவள்ளுவராண்டு 2049.**

**படிக்க:–**

1 அரசாணை (நிலை) எண்.29, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை, நாள் 31.01.2007.

2 அரசாணை (நிலை) எண்.235, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை, நாள் 21.09.2007.

3 அரசாணை (நிலை) எண்.231, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை, நாள் 25.09.2008.

4 அரசாணை (நிலை) எண்.4, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை, நாள் 12.01.2012.

5 மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் அவர்களின் கடித எண்.25082/2017/எப்/3, நாள் 14.11.2017 மற்றும் 21.03.2018

-------

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை–எண்ணூர் துறைமுக இணைப்புத் திட்டத்தின் கீழ் (EMRIP) திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையினை (Tiruvottiyur – Ponneri-Panchetty Road) அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு நிலம் கையகப்படுத்த ஆகும் செலவு, விளம்பரச் செலவு மற்ற அலுவலர்கள் சம்பளம் ஆகிய செலவினங்களுக்கான ரூ.8,91,93,308/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் நிலம் கையகப்படுத்துவதற்காக மட்டும் ரூ.8,37,69,280/– அனுமதிக்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை முடிவு செய்வதற்கு சிறிது காலமாகும் என்பதால், திட்டப்பணியினை காலதாமதமின்றி செய்து முடிக்க வேண்டியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி, நிலத்தை ஒப்படைக்க உரிமையாளர்களிடம் எழுத்துப்பூர்வ ஒப்புதல் (Written Consent) பெற்று, கட்டுமானங்களின் மதிப்பீட்டில் மட்டும் உரிமையாளர்களுக்கு 80 சதவீதம் முன் பணம் வழங்க அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்கனவே அனுமதித்த ரூ.8,37,69,280/–ஐ தவிர மேலும் கூடுதலாக ரூ.7,21,26,370/– ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்கனவே அனுமதித்த ரூ.15,58,95,650/–ஐ தவிர மேலும் கூடுதலாக ரூ.1,21,73,000/–ற்கு (ரூபாய் ஒரு கோடியே இருபத்தியோரு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் மட்டும்) ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது.

5. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், திருவொற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலைத் திட்டத்திற்காக எண்.144. வல்லூர் II & III கிராமங்களில் புல எண்.615/1பி மற்றும் பலவற்றில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை நிலஎடுப்பு சட்டம் 2001-ன் கீழ் பின்வருமாறு தீர்ப்பாணை பகரப்பட்டுள்ளது.

| வ.எண். | தீர்ப்பாணை எண். | நாள் |
|---|---|---|
| 1. | 5/2009 | 20.04.2009 (வல்லூர்-III) |
| 2. | 6/2009 | 21.10.2009 (வல்லூர்-II |

மேற்படி நிலஎடுப்பில் உட்படும் 104 நில உரிமையாளர்கள் கூடுதல் இழப்பீட்டுத் தொகை வழங்கக் கோரி மனு அளிக்கப்பட்டு அம்மனுக்கள் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் நிலஎடுப்பு அசல் மனு (LAOP) எண்கள் கொடுக்கப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டன. அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு:-

| வ. எண் | தீர்ப்பாணை எண். | நாள் | சுவாதீனம் ஒப்படைத்த நாள் (Taken Over possession) | சர்வே எண். | நிலஎடுப்பு அசல் மனு எண்கள் (LAOP Nos.) |
|---|---|---|---|---|---|
| 1. | 6/2009 | 21.10.2009 | 10.10.2007 | 529/5C, 529/2A1B, 529/5B, 529/2E1B, 532/2C2, 532/2D2, 532/2E2, 541/1B, 541/2B, 542/2, 548/1C2, 550/2, 548/1C2, 550/2, 553/1B2, 593/1A1C, 610/5B, 616/7, 647/1A1B, 648/2B, | 83/2010, 84/2010, 86/2010, 87/2010, 88/2010, 89/2010, 90/2010, 91/2010, 92/2010, 93/2010, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 1678/1B, 1677/4B, 1677/3B, 1677/2B, 1676/10B, 1676/8B, 1676/7B, 1735/2B, 1735/5B, 1735/6B, 1735/1B, 526/17B, 526/1B2, 526/11, 529/2A2B, 529/2B2, 532/2A2, 1678/3B, 612/8B, 610/4A3, 610/4A4, 610/3D, 610/4A2, 599/2A2, 591/1, 613/2C2, 613/2C2, 1678/1B, 608/1B, 1735/4B. | 122/2010,<br>123/2010,<br>124/2010,<br>125/2010,<br>126/2010,<br>127/2010,<br>128/2010,<br>129/2010,<br>130/2010,<br>131/2010,<br>132/2010,<br>133/2010,<br>134/2010,<br>135/2010,<br>136/2010,<br>137/2010,<br>138/2010,<br>139/2010,<br>140/2010,<br>141/2010,<br>155/2010,<br>156/2010,<br>157/2010,<br>158/2010,<br>159/2010,<br>160/2010,<br>161/2010,<br>350/2010,<br>351/2010,<br>352/2010,<br>353/2010,<br>354/2010,<br>355/2010,<br>356/2010,<br>357/2010,<br>367/2010,<br>390/2010,<br>394/2010. |
| | | | 09.06.2008 | 615/1B. | 142/2010 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 648/3B, 648/5B,<br>654/2C2, 655/1C2,<br>658/2B, 658/2B,<br>1678/4B, 1678/5B,<br>1676/12B, 1736/3B,<br>536/2F2, 616/2B,<br>553/2B, 536/2B,<br>554/3B, 564/2,<br>549/2B, 647/6B,<br>610/3A2, 610/2B,<br>593/1A1C,<br>654/1A1B,<br>647/1A1C, 655/1A2,<br>655/1B2, 1736/3B,<br>550/1B. | 95/2010,<br>96/2010,<br>97/2010,<br>98/2010,<br>99/2010,<br>100/2010,<br>101/2010,<br>102/2010,<br>103/2010,<br>104/2010,<br>105/2010,<br>106/2010,<br>108/2010,<br>109/2010,<br>110/2010,<br>150/2010,<br>151/2010,<br>152/2010,<br>153/2010,<br>154/2010,<br>358/2010,<br>359/2010,<br>360/2010,<br>361/2010,<br>362/2010,<br>389/2010,<br>391/2010,<br>392/2010,<br>393/2010,<br>395/2010,<br>396/2010,<br>145/2011,<br>18/2012. |
| | | | 29.02.2008 | 532/2B2, 593/3B,<br>545/1B, 545/2,<br>548/1B2, 548/2B,<br>593/1A1B, 593/2B,<br>610/3A3B, 610/3B,<br>610/3C, 610/4B,<br>613/2A, 648/1B,<br>613/2B2, 616/6,<br>616/10, 647/2B,<br>648/4B, 654/1A2B,<br>654/1B2, 654/2B1,<br>655/4B, 658/1B, | 85/2010,<br>111/2010,<br>112/2010,<br>113/2010,<br>114/2010,<br>115/2010,<br>116/2010,<br>117/2010,<br>118/2010,<br>119/2010,<br>120/2010,<br>121/2010, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 5/2009 | 20.04.2009 | 10.10.2007 | 691/2A, 691/3A, 751/1, 752/1, 752/2, 753/1A1, 755/2, 805/1, 737/1, 738/2B, 738/1B, | 72/2010, 73/2010, 74/2010, 75/2010, 76/2010, 77/2010. |
| | | | 22.02.2008 | 691/1A, 692/2A1, 689/2A, 688/1. | 78/2010, 79/2010, 81/2010, 82/2010. |

6. மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் அவர்கள் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

அ) நில இழப்பீட்டுத் தொகையாக சதுரடி ஒன்றுக்கு ரூ.37/- (தீர்ப்பாணை எண்கள்.5/2009 மற்றும் 6/2009) என கணக்கீடு செய்து நிலஎடுப்பு அலுவலரால் நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. நில இழப்பீட்டுத் தொகை குறைவாக உள்ளது என்பதால் நில உரிமையாளர்கள் சார்பு நீதிமன்றம், பொன்னேரியில் 104 வழக்குகள் தொடர்ந்தனர்.

ஆ) நிலஎடுப்பு அசல் மனு எண்.142/2010 மற்றும் பலவாக பதியப்பட்டு விசாரணை நடைபெற்றது. விசாரணை முடிவில் பொன்னேரி சார்பு நீதிமன்றம் நில இழப்பீட்டுத் தொகையினை சதுரடி ஒன்றுக்கு ரூ.524/- என உயர்த்தி நிர்ணயித்து 10.04.2015 அன்று ஆணை பிறப்பித்தது.

இ) மேற்கண்ட உத்தரவின்படி நில உடமையாளர்களுக்கு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் துறை நில ஆர்ஜித சட்டத்தின்படி இதர சலுகைகளையும் பெற தகுதியானவர்கள் என்பதால் அந்த சலுகைகளையும் வழங்கிடுமாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி உயர்த்தப்பட்ட நில இழப்பீட்டுத் தொகைக்கு 30% ஆறுதல் தொகை வழங்கவும், நில உடமைதாரர்களுக்கு ஏற்கனவே வழங்கிய தொகையின் கழித்துக் கொள்ளவும், 12% கூடுதல் மார்கெட் மதிப்பு நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து அவார்டு பிறப்பித்த நாள் வரை வழங்கவும், 9% வட்டி நில சுவாதீனம் எடுத்த நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு கணக்கிட்டு வழங்கவும், 15% வட்டி அடுத்து வரும் நாட்களுக்கு வழங்கவும் உத்திரவு பிறப்பித்தது.

ஈ) 10.04.2015 அன்று சார்பு நீதிமன்றம், பொன்னேரி வழங்கிய மேற்கண்ட உத்திரவினை எதிர்த்து தனி வட்டாட்சியர் (நிலஎடுப்பு), திருவொற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலைத் திட்டங்கள், பொன்னேரி அவர்களால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அவை மேல்முறையீட்டு எண்.1006/2015 முதல் 1109/2015 வரை உள்ள 104 தொகுப்பு வழக்குகளாக பதிந்து விசாரணை நடைபெற்றது.

உ) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் 29.11.2016 அன்று நில இழப்பீட்டுத் தொகையினை சதுர அடி ஒன்றுக்கு ரூ.485/- என குறைத்து நிர்ணயித்து பொன்னேரி சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இதர சலுகைகளையும் நில உரிமைதாரர்களுக்கு வழங்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஊ) இவ்வுத்தரவின் மேல்முறையீடு செய்யும் பொருட்டு அரசு வழக்கறிஞரின் கருத்துரை கோரப்பட்டதில் அரசு வழக்கறிஞர் இவ்வழக்கு மேல்முறையீட்டுக்கு உகந்ததல்ல என கருத்துரை வழங்கியுள்ளார்.

எ) எனவே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம 29.11.2016 அன்று வழங்கிய தீர்ப்பினை அமல்படுத்தவும், தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் துறை நிலஎடுப்பு சட்டம் 2001-ன்படியும் நில உடமைதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை வழங்கும் கணக்கீடு தாள்தயார் செய்யப்பட்டுள்ளது.

ஏ) மேற்படி 104 தொகுப்பு இனங்களில் நிலஎடுப்பு நிலங்களில் 63 இனங்கள் விவசாயம் அல்லாத நிலங்களாக (Non Agricultural Land) கருத்தில் கொள்ளப்பட்டு நிலஉரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய மொத்த தொகைக்கு 10% வருமானவரியும், ரூ.10,00,000/- க்கு மேற்பட்டால் 10% வருமான வரிக்கு 10% மேல்வரியும், வருமானவரிக்கு 3% சர்ஜார்ஜ் (10% வ.வரி + 10% மேல்வரி)-ம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

ஐ) மேலும் மேற்படி 104 தொகுப்பு இனங்களில் நிலஎடுப்பு நிலங்களில் 41 இனங்கள் விவசாய நிலங்களாக (Agricultural Land) கருத்தில் கொள்ளப்பட்டு, அந்நிலங்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்ட தேதியிலிருந்து அவார்டு பிறப்பிக்கப்பட்ட தேதி வரை கணக்கிடப்பட்ட 9% வட்டித் தொகை மற்றும் அவார்டு பிறப்பிக்கப்பட்ட பிந்திய தேதியிலிருந்து தொகை வைப்பீடு செய்யும் தேதி வரையிலும் கணக்கீடு செய்யப்பட்ட 9% வட்டி தொகை ஆக இரண்டு 9% வட்டித் தொகையின் கூட்டுத் தொகைக்கு 10% வருமானவரியும், ரூ.10,00,000/- க்கு மேற்பட்டால் 10% வருமான வரிக்கு 10% மேல்வரியும், வருமானவரிக்கு 3% சர்ஜார்ஜ் (10% வருமான வரி + 10% மேல்வரி)-ம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

7. மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் அவர்கள் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையினை சென்னை உயர்நீதிமன்றத்தால் 29.11.2016 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 30.04.2018 –ம் நாள் வரை வட்டி கணக்கிடப்பட்டு, ரூ.40,49,24,925/– ஐ (ரூபாய் நாற்பது கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) இழப்பீட்டு தொகையாக நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

8. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலைத் திட்டத்திற்காக எண் 144, வல்லூர் II & III கிராமங்களின் புல எண் 615/1பி மற்றும் பலவற்றில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை நிலஎடுப்பு சட்டம் 2001–ன் கீழ் நிலஎடுப்பு செய்யப்பட்டதற்கு மேல்முறையீட்டு மனு எண் 1006/2015 முதல் 1109/2015 வரையுள்ள 104 தொகுப்பு வழக்குகளுக்கு சென்னை உயர்நீதிமன்றத்தால் 29.11.2016 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 30.04.2018 –ம் நாள் வரை வட்டி கணக்கிடப்பட்டு, ரூ.40,49,24,925/– ஐ (ரூபாய் நாற்பது கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) சில உரிமையாளர்களுக்கு உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையினை (இணைப்பில் குறிப்பிட்டவாறு) வழங்க அரசு இதன் வழி ஆணையிடுகிறது.

9. மேலே பத்தி 8 –ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04 – மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும் – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள்– JK - புறவழிச்சாலை அமைப்புக்காக நிலம் கையகப்படுத்துதல் –64– நிலங்கள் (சாட்டியது)
>
> (த.தொ.கு.5054–04–800– JK-6403) (சாட்டியது).

10. மேலே பத்தி 8–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் நடப்பு 2018–2019 – ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும், 2018–2019 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்க கருத்துருவை நிதி (பொதுப்பணி–1)த் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து உரிய நேரத்தில் அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றம் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினம் 2018–19 ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். இதற்குரிய வரைவு விளக்க குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது–1) துறைக்கு அனுப்புமாறும் தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை அவர்கள் கோரப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 23098/பொ.ப–I/18, நாள் 25.05.2018 ன் படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 327 (முன்னூற்று இருபத்தி ஏழு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு),
நெடுஞ்சாலைத்துறை, சென்னை –5
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்.
மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர்
சிறப்பு வட்டாட்சியர் (நில எடுப்பு), திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலை திட்டம், பொன்னேரி.

நகல்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
திட்ட இயக்குநர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை–6
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8
நிதித் (பொ.ப.1/வரவு செலவு பொ.ப– I & II ) துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் )
அவர்களின் நேர்முக உதவியாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,சென்னை–9
இ.கோ/உ.கோ.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

25.5.18

பிரிவு அலுவலர்